www.tamilarangam.net

198

அரசியல் தொடர்


# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# வன்னியில் முதல் கரும்புலித் தாக்குதல்

மன்னார் கொண்டைச்சி இராணுவ முகாம் 21.06.90 அன்று விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு இலக்கானது.

வன்னித் தளபதி பால்ராஜ், மன்னார் தளபதி தீபன் ஆகியோரது தலைமையில் பாரிய தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை ஊகித்த படையினர் எதிர்ப்



புக் காட்டுவதை கைவிட்டு பின்வாங்கினார்கள்.

முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது. அங்கிருந்து பெரும்தொகையான ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம் முகாமில் இருந்து பவள் கவச வாகனம் ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

கண்ணிவெடிக்கு தாக்குப் பிடிக்கக் கூடியது என்று இலங்கை அரசுக்கு அன்றைய தென்னாபிரிக்க நிறவெறி அரசு பவள் கவச வாகனத்தை கொடுத்திருந்தது.

பவள் கவசவாகனம் உட்பட கொண்டச்சி இராணுவ முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் 22.07.90ல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

1990 இறுதிவரை நடைபெற்ற சண்டைகளில் மொத்தம் 16 கவசவாகனங்கள்வரை புலிகளால் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

கவசவாகனம் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

## வன்னித்தளம்

இந்தியப்படை திரும்பிச் சென்ற பின்னர் யாழ் குடாநாடு மறுபடி புலிகளின் தளப்பிரதேசமாக மாறியிருந்தது.

புலிகளின் நிர்வாகமே நடந்து வந்தது. அரச நிர்வாகம் என்பது பெயரளவில் மட்டுமே.

யாழ் குடாநாடு தளப்பிரதேசமாக இருந்தும்கூட, நீண்டகால நோக்கில் புலிகளின் இராணுவ செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வன்னிப் பிராந்தியத்தில் இலங்கை அரச படைகளின் முதுகெலும்பாக உள்ள முகாம்களை தாக்கியழிப்பது அவசியம் என்று தீர்மானித்தார் பிரபாகரன்.

வன்னித் தளபதியாக ஒருகாலத்தில் இருந்தவர் மாத்தையா. ஆனால் மாத்தையாவின் தலைமையில் நடைபெற்ற தாக்குதல்கள் பல தோல்வியிலேயே முடிந்தன.

புலிகளின் மக்கள் முன்னணித் தலைவராக மாத்தையாவை நியமித்த பிரபாகரன், வன்னித் தளபதியாக பால்ராஜை நியமித்தார்.

திறமை, விசுவாசம், கட்டுப்பாடு என்பவற்றின் அடிப்படையில் பொறுப்பாளர்களை தேர்வு செய்வதில் பிரபாகரன் தேர்ச்சியானவர். அதனால்தான் ஏனைய இயக்கங்களால் சாதிக்க முடியாத பல காரியங்களை செய்ய முடிந்தது என்பதையும் மறத்தலாகாது.

பால்ராஜை வன்னித் தளபதியாக பிரபா நியமித்த பின்னர்தான் அங்கு பல இராணுவ முகாம்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னாரில் இருந்து வில்பத்து சரணாலயப் பக்கம் புலிகள் சென்று வருவதை தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த முகாமே கொண்டைச்சி இராணுவ முகாம்.

மன்னார் நகரில் இருந்து தெற்காக 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

கொண்டைச்சி முகாமை புலிகள் கைப்பற்றிய பின்னர் அப்போக்குவரத்து புலிகளுக்கு சுலபமாகியது.

வன்னிப் பிராந்தியத்தில் கேந்திர நிலைகளில் இருக்கக்கூடிய முகாம்களை அவை பலமாக முன்னரே கைப்பற்றிவிட வேண்டும் என்பது பிரபாகரனின் திட்டம்.

'எதிரி பலமாக முன்னர் நாம் முந்திக் கொள்ள வேண்டும்' என்னும் பிரபாகரனின் கருத்துத்தான் இங்கும் கடைப்பிடிக்கப் பட்டது.

கொண்டைச்சி முகாமை கைப்பற்றிய புலிகள் அடுத்துக் குறிவைத்தது மாங்குளம் இராணுவ முகாமை.

## பெரும் முகாம்



புலிகள் கைப்பற்றிய பவள்

வன்னியில் அரச படையினரின் பாரிய முகாம்களில் ஒன்றாக இருந்தது மாங்குளம் முகாம்.

வன்னிப் பிராந்தியத்தை இரண்டாக பிரிக்கும் வியூகம் வகுக்கக்கூடிய தள முகாமாகவும் அது இருந்தது.

கொக்காவில் இராணுவ முகாம், கொண்டைச்சி இராணுவ முகாம் என்பவை தாக்கியழிக்கப்பட்ட பின்னர் மாங்குளம் இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டது.

புலிகளின் தாக்குதலை அங்கு படையினர் எதிர்பார்த்தே இருந்தனர்.

22.11.90 அன்று மாங்குளம் இராணுவ முகாம் மீது பால்ராஜ் தலைமையில் புலிகள் அதிரடித் தாக்குதலை ஆரம்பித்தனர்.

காவலரணை நோக்கி ஆர்.பி.ஜி. தாக்குதல்களை நடத்தினர் புலிகள்.

காவலரண் மண் மூட்டைகள்மீதும் பதுங்குகுழிகள் நோக்கியும் ஷெல்கள் விழுந்து வெடிக்க படையினர் பாதுகாப்பு தேட பதுங்குகுழிகளை நாடினர்.

அதே நேரம் புலிகளின் அணிகள் அலை அலையாக முகாம் நோக்கி முன்னேறின.

முதலில் அதிர்வுகளால் தடுமாற்றம் கண்டாலும், பின்னர் சுதாகரித்துக் கொண்ட படையினரும் திருப்பித் தாக்க ஆரம்பித்தனர்.

புலிகளின் அணிகளது முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது கடும் சண்டை மூண்டது.

சண்டையுடன் பொழுது மலர்ந்தது. மறுநாள் விமானங்கள் வட்டமிட்டன. குண்டுகளை வீசின. ஆனால் புலிகளின் முற்றுகையை உடைக்க முடியவில்லை.

வேறு முகாம்களில் இருந்து படையினர் தரை நகர்வு முயற்சிகளை மேற்கொண்டு மாங்குளம் நோக்கி செல்லவும் முடியவில்லை.

புலிகளின் அணிகள் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய முகாம்கள் முன்பும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தன.



சக்கை லொறியுடன் போர்க்

## கரும்புலித் தாக்குதல்

23ம் திகதி மோதல் தொடர்ந்தது. மோதலை நீளவிடாமல் அதிரடி மூலம் முகாமை விரைவாக கைப்பற்ற முடிவு செய்தனர் புலிகள்.

முதல் தாக்குதலில் முகாம் வீழ்ச்சி காணாவிட்டால், மறுநாள் கரும்புலித் தாக்குதல் மேற்கொண்டு முகாமை அழிப்பது என்பது தாக்குதல் திட்டம் தீட்டப்படும்போதே செய்யப்பட்ட முடிவு. அந்த முடிவின்போது வெடிமருந்து நிரப்பி தயாராக நின்ற லொறியில் முகாம் நோக்கிப் புறப்பட்டார் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க்.

மாங்குளம் முகாம் பற்றியும் அதன் சுற்றாடல் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருந்த போர்க், குண்டு லொறியில் ஏறும் போது; "நான் புறப்படுகிறேன். இதோ மாங்குளம் முகாம் முடிந்தது" என்று கூறிவிட்டு சென்றார்.

வெடிமருந்து நிரப்பிய லொறியை சக்கை லொறி என்றுதான் அழைப்பர்.

சக்கை லொறி வெடித்ததும் முகாம் அதிரும். அந்த அதிர்வு அடங்க முன்னரே முகாம் நோக்கிப் பாய்வதற்கு தயார் நிலையில் பதுங்கியிருந்தன புலிகளின் அணிகள்.

சக்கை லொறி தங்குதடையின்றி விரைந்துபோய் இலக்கில் இடித்தது.

மாங்குளம் எங்கும் அந்த அதிர்வு கேட்டது. அதன் பின்னர் புலிகளின் தாக்குதல் அணிகளது துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசைகள் கேட்ட வண்ணம் இருந்தன.

சக்கை லொறித் தாக்குதலில் முகாமுக்குள் இருந்து சளைக்காமல் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான படையினர் பலியாகினர்.

அத்தாக்குதல் மட்டும் இல்லையானால் முகாமை கைப்பற்றுவது கடினமான காரியமாகவே இருந்திருக்கும்.

எஞ்சிய படையினர் மாங்குளத்தை அண்டியிருந்த காட்டுப்பகுதிகளை நோக்கிப் பின் வாங்கினர்.

முன்னூறுக்கு மேற்பட்ட படையினர் இச் சண்டையில் பலியாகினர். புலிகள் தரப்பில் பெண் புலிகள் உட்பட 40 பேர் பலியாகினர்.

மாங்குளம் சண்டையிலும் புலிகளின் பெண்கள் படையணி முக்கிய பங்கு வகித்திருந்தது.

ஏராளமான ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் தொடர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் கூறிய விளக்கம் சுவாரசியமானது.

"முகாமைவிட்டு நாம்தான் தந்திரோபாயமாக வெளியேறினோம். வெளியே இருந்து புலிகளை எதிர்த்து தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறோம்" என்று கூறியிருந்தார் ரஞ்சன்.

அன்று மாங்குளம் முகாமை புலிகள் கைப்பற்றியிருக்காவிட்டால் இன்று நடந்து வரும் 'ஜயசிக்குறுய்' எப்போதோ இலக்கை எட்டியிருக்கவும் கூடும்.

நீண்டகால நோக்கில் பிரபாகரன் எடுத்த இராணுவரீதியான முடிவுகள்தான் இப்போது புலிகளுக்கு உதவுகின்றன.

மாங்குளத்தை கைப்பற்ற மட்டும் ஜயசிக்குறுய் படைகள் கிட்டத்தட்ட ஆறுமாத காலமாக முயன்றுகொண்டிருக்கின்றன. இது ஒன்றே மாங்குளம் இராணுவ முகாமின் கேந்திர முக்கியவத்துவத்தை அறிந்து கொள்ளப் போதுமானது.

## கரும்புலி போர்க்

வன்னியில் நடைபெற்ற சண்டையில் பலியான முதல் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க்.

போர்க் வன்னியில் சேமமடு என்ற இடத்தைச் சேர்ந்தவர். இக்கிராமத்தின் எல்லையாக இருப்பது சிங்களக் கிராமமாகும்.

கரும்புலித் தாக்குதல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தன் கிராமத்திற்கு சென்றார் போர்க்.

கரும்புலித் தாக்குதலுக்கு புறப்படும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் குறிப்பிட்ட நாளுக்கு முன் தங்கள் வீடுகளுக்கு சென்று தாய், தந்தை சகோதரங்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட்டு வருவர்.

போர்க்கும் தன் தாயாரிடம் சென்று "அம்மா எனக்கு உங்கட கையாலே ஒரு பொட்டு வைச்சுவிடுங்கோவன், ஆசையாக இருக்கிறது" என்று கேட்டார்.

ஏன் கேட்கிறான் மகன் என்று அறியாத தாயாரும் பொட்டு வைத்து மகிழ்ந்தார். சிரித்தபடியே விடைபெற்ற போர்க் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின்னர் போய்விட்டார்.

பக்கத்துவீட்டுச் சிறுவர்களுடன் விளையாட்டாக கதைத்துக் கொண்டிருந்த போர்க்; "தம்பியவை மாவீரர் தினம் வருகுதல்லோ, தற்செயலாக நான் செத்தால் அண்டைக்கு என்ன செய்வியள்?" என்று கேட்டார்.

"நீங்கள் ஏன் சாகப்போறியள்" என்று கூறினர் சிறுவர்கள்.

போர்க் சிரித்தபடி: "தப்பித்தவறி நான் செத்துப்போனா என் நினைவாக ஆளுக்கு ஒரு மரம் நட்டு வளவுங்கோ" என்று கூறினாராம்.

அற்புதன் எழுதுவது

கரும்புலியாக போர்க் சென்றபின்னர் அவரது தாயார் கூறினார்: "அவன் அண்டைக்கு வித்தியாசமாக நடந்து கொண்டதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் கரும்புலியாகச் செத்த பிறகுதான் அவன் பக்கத்தில் படுக்கச் சொன்னது, பொட்டுவைக்கச் சொன்னது, உடுப்புக்களை விட்டிட்டுப் போனது ஏனெண்டு விளங்குது!"

## மாவீரர் தினம்

1990 மாவீரர் தினத்துக்குமான தாக்குதலாகவே மாங்குளம் முகாம் தாக்குதல் நடத்தப்பட்டது.

புலிகள் பலவீனமாகிவிட்டனர். அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்று கூறிவந்த அரசாங்கத்திற்கு மாங்குளம் தாக்குதல் நெத்தியடியாக அமைந்தது.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்